விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 19 ஷஃபான் 30 இதழ் 139
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-7-1981

3.7.81

## "பிரிவினைத் தடைச்சட்டத்தால் எமது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது"

### மட்டக்களப்பில் கூட்டணித் தலைவர்

[மண்முனை]
எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக நீதியை ஆட்சியாளரிடம் கேட்கப் போவதில்லை. நாமே நீதியை நிலைநாட்டப் போராடுவோம். நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயப்போவ இல்லை. எமது ஐந்து அம்சக் கோரிக்கைகள் அரசால் நிறை வேற்ற முடியாதவைகளல்ல. எமது கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் வரை பாராளு மன்றத்தைப்பகிஷ்கரிப்போம். அவை பயனளிககாவிட்டால் இதற்கு மேலான நடவடிக்கை களையும் எடுக்கத் தவறமாட் டோம்.

இவ்வாறு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்த உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உரையாற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் பாராளுமன்ற உறுப் பினருமான திரு.எம்.சிவசிதம்

[6ம்-பக்கம் பார்க்க]

# அபிவிருத்திச் சபைகளின் கீழ் பொலிஸ்படை!

## ஜனாதிபதியைக் கோரும் மகஜருக்கு லட்சம் பேரிடம் கையெழுத்து வேட்டை

[யாழ்ப்பாணம்]
"யாழ். வன்செயல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்த அனைத்துலக மன் னிப்புச்சபைக்கு அழைப்பு விடவேண்டும்.

"வடக்கு' கிழக்கு மாகா ணங்களில் உள்ள ஆயுதப் படைகள் அகற்றப்பட வேண்டும்.

பொலிஸ் சேவையைப்புன ரமைப்புச் செய்து மாவட்ட அபிவிருத்திச் சபையின் பொறுப்பில் விட வேண் டும்."

மேற்படி கோரிக்கைகள் உட் பட 6 கோரிக்கைகள் அடங் கிய மகஜர் ஒன்றை நீதிக்கும் சமத்துவத்துக்குமானஇயக்கத் தின் வடபகு திக்கிளையினர், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளனர்.

இம்மகஜரில் ஒரு லட்சம் பேரின் கையெழுத்து திரட்டப் பட்டு வருகிறது. நேற்று யாழ். பஸ் நிலையத்திலும், பெரிய கடைப் பகுதிகளிலும் இளைஞர்கள் கையெழுத்துச் சேகரித்தனர்.

தொகுதி ரீதியாக கிராமம் கிராமமாக இம்மகஜரில் கை யெழுத்துச் சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

ஒரு லட்சம் பேரின் கையெ ழுத்துடன் மகஜர் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன வுக்கு அனுப்பி வைக்கப்பட விருக்கிறது.

தமிழில் எழுதப்பட்டுள்ள இம்மகஜரில் உள்ள மற்றும் மூன்று கோரிக்கைகளும் வரு மாறு:

ஃ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல், தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ள இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

ஃ கைது செய்வதற்கும், தடுப்புக் காவலில் வைப்பதற்

[6-ம் பக்கம் பார்க்க]

### ஆதீனமுதல்வர், யாழ். எம். பி. முதலில் கையெழுத்திட்டனர்

[யாழ்ப்பாணம்]
ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள ஆறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பத்திரங்களை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் வைத்து நீதிக்கும் சமத்துவத் திற்குமான இயக்கத்தின வட பிராந்திய கிளைத் தலைவர் திரு. சீலன் கதிர்காமர் தொண்டர் களுக்கு வழங்கினர்.

ஆரம்பத்தில், இக் கோரிக் கைகளை வலியுறுத்தும் வகை யில், முதல் நல்லை ஆதீன முதல் வர் சுவாமி சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், வண. ஜேம்ஸ் பத்திநாதன் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ்ப்பாண மாநகரசபை மேயர் இராஜா விசுவநாதன், மாநகரசபை உறுப்பினர்கள், தொழிற்சங்கப்பிரமுகர்கள், இப்பத்திரத்தில் கையெழுத் திட்டனர். [க]

## வ. போ. ச. இளைப்பாறிய ஊழியருக்கு 40,000ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும்

### ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]
"வடபிராந்திய போக்கு வரத்து சபையிலிருந்து சுற்று நிருபத்தின்படி இளைப்பாறிய ஊழியர்களுக்கு நஷ்டஈடாக நாலு வருட சம்பளம் அல்லது 40,000 ரூபா, இதில் எது குறைவோ அதனை வழங்க வேண்டும்."

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய வர்த்தன, பிரதமர் பிரேம தாசா மற்றும் அமைச்சர் களுக்கு வடபிராந்திய போக்கு வரத்துச் சபை இளைப்பாறிய ஊழியர் சங்கத் தலைவர் திரு. கே. அருளானந்தம் அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

3 மாத முன்னறிவித்தல் கொடுக்காததினால் 1-5-81 முதல் 31-7-81 வரையிலான 3 மாத சம்பளமும் வழங்க வேண்டும் என்றும் அந்த மக ஜரில் தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இலங்கை போக்குவரத்து சபை யினால் வழங்கப்பட்ட 14ம் இலக்க சுற்றறிக்கை ஊழியரை பயமுறுத்தும் ஒன்றாகும். இச் சுற்றறிக்கையை அமுல் நடத் தும் போது ஊழியருக்கு3 மாத கால முன்னறிவித்தல் கொடுக் கப்படவில்லை. சிலர் விஷயத் தில் 24மணி முன்னறிவித்தல் கூட கொடுக்கப்படவில்லை.

வடபிராந்திய போக்கு வரத்து சபையை லாபத்தில் இயங்குவதற்கு இந்த ஊழியர் கள் பெரும் முயற்சியளித்த போதிலும் இந்த ஊழியர்கள் மீது நடந்து கொண்ட விதத் தையிட்டு இச்சங்கம் அதிருப் தியை தெரிவித்துக்கொள்கி றது. [க]

## நயினை உற்சவம் இன்று ஆரம்பம்

[வேலணை]
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிறது. தொடர்ந்து 16 தினங்களுக்கு உற்சவம் நடை பெறும்.

இம் மாதம் 12ம் திகதி இரவு மஞ்சத் திருவிழாவும், 15ம் திகதி சப்பரத்திருவிழாவும், 16ம் திகதி தேர்த்திருவிழாவும்

[6ம் பக்கம் பார்க்க]

நயினாதீவு அமுதசுரபியினரின்
அன்பான வேண்டுகோள்
திருவிழா ஆரம்பம்
3-7-81 வெள்ளிக்கிழமை

அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை யினர் வழமைபோல் தங்கள் தொண்டர்களை சில பகுதி களுக்கு பணம்-பொருள் முதலியன சேர்ப்பதற்கு அனுப்ப இயலவில்லை.

ஆகவே வழமையாகப் பணவுதவி-பொருளுதவி செய் வோரும்-செய்ய விரும்புவோர்களும் தயவுசெய்து கீழ் வரும் முகவரிக்கு அனுப்பியுதவுமாறு அன்புடன் கேட் டுக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு:- கொடியேற்ற தினமாகிய இன்றும் வழமைபோல் சிறந்த முறையில் அன்னதானம் நடை பெறும்.

கௌரவ காரியதரிசி,
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி-
அமுதசுரபி அன்னதானசபை.

அமுதசுரபி மண்டபம்,
நயினாதீவு.

0201

மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

தமது தலைமைச் செயலகத்தை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்துள்ள ஒரே ஒரு பாதுகாப்பான நிதி நிறுவனம்.

வருடமொன்றிற்கு ஆகக் கூடுதலான
26%
வட்டி வழங்குகின்றது

குறைந்தபட்ச வைப்புப்பணம் ரூபா 500/- மட்டுமே

ஏனைய விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:
தலைமைச் செயலகம்,
129, கோவில் வீதி யாழ்ப்பாணம் (தொலைபேசி: 8183)

# வரி விளம்பரம்

## தேவை

கிறைண்டிங் மில்லில் வேலை செய்யத் தகுதியுடையவர்கள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0164

டார்க்றூம் வேலையில் (Dark room work) அனுபவமுள்ளவர் உடனே 'செல்லம்ஸ் ஸ்ருடியோ', சுன்னாகம், யாழ்ப்பாணம் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 0184

## விற்பனைக்கு

யாழ். அத்தியடி உப தபால் கந்தோருக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி பிரித்தும் கொடுக்கலாம். விபரங்களுக்கு: A. நித்தியானந்தராசா, பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. 0182)

வோக்ஸ் வக்கன் 2 சிறி 1355. சி. செல்வரத்தினம், பழைய தபால் கந்தோர் வீதி, பருத்தித்துறை. 0154

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு முன்னால் அத்திவாரத்துடன் கூடிய ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: சி. அப்புத்துரை மாரியம்மன் கோவிலடி, மாவிட்டபுரம். 0189

ஹொண்டா CD 90 80ஸ்ரீ 5000 தொடர். பார்வையிடும் இடம் ரும்சன்ஸ் றாவெயர் ஸ்ரோர்ஸ், 19, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 508. (0192)

## பயிற்சி

புதிய குளிரூட்டல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகின்றன. விண்ணப்பங்கள் 10-7-81க்கு முன்னர் கிடைத்தல் வேண்டும். அதிபர், ஐ. ஏ. ஆர். 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [0173]

## வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரவியல், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electr'cal Wiring, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை அறிமுறைப் பயிற்சி வகுப்புகள் 11-7-81இல் ஆரம்பம். தங்குமிட வசதியும் உண்டு. C E T யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவின் முன்னால்) 22, இராமநாதச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். [0175]

## காணவில்லை

V P சிவராசா அவர்களின் மூன்றாவது மகன் இராமகிருஷ்ணனை 17-6-81 முதல் காணவில்லை. 5 அடி 2 அங் உயரமும் கருநிறமும் உடைய இவரை கண்டுபிடித்துத் தந்தால் அல்லது நேரில் தகவல் தந்தாலும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். V. P. சிவராசா, 'இராஜேஸ்வரி வாசம்', திருநெல்வேலி தெற்கு. 0187

## WANTED

"An efficient and experienced Sales Representative to market our products. Preference will be given to those have driving licence for Vans and also can furnish security. Attractive commission guaranteed. Apply before 7th July, 1981. Ramsons (Travel Goods) Industry, 19, Stanley Road, Jaffna. Telephone: 508. (0191)

High School English Grammer and Composition by Spaight and Sethi. Contact: K. Kandasamy, Jaffna College Technical Institute, Vaddukoddai. 0190

## மதுபோதையில் குழப்பம் விளைவித்தாராம்

(புலோலி)

மதுபோதையில் மந்திகை அரசினர் வைத்தியசாலை நோயாளிகள் விடுதிக்குள் சென்று குழப்பம் விளைவித்தவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

நோயாளிகள் விடுதிக்குள் மதுபோதையில் வந்த நபரொருவர் நோயாளிகளுக்கும் கடமையிலிருந்த ஊழியர்களுக்கும் இடைஞ்சல் விளைவித்துக் கொண்டிருப்பதாகப் மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி பருத்தித்துறைப் பொலிசாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து புலோலி தெற்கைச் சேர்ந்த இராசையா தனபாலசிங்கம் என்பவரைக் கைது செய்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர். நீதவான் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## யாழ். நகரில் இந்திரா காங்கிரஸ் பிரமுகர்

(யாழ்ப்பாணம்)

இந்திரா காங்கிரஸ் பிரமுகர் திரு. என். கல்யாணசுந்தரம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

இவர் பிரபல சினிமா படத் தயாரிப்பாளரும், சென்னை சினிமாப்பட விநியோகஸ்தருமாவார்.

திரு கல்யாணசுந்தரத்தை அ. இ. அ. தி. மு. க அமைப்புச் செயலாளர் திரு பொன். மகேந்திரராசா ஜே. பி, பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கூட்டிச்சென்று காண்பித்தார்.

இவர், திருமதி யோகேஸ்வரன், யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன், ஆணையாளர் திரு. சி. சிவஞானம் ஆகியோரைச் சந்தித்து உரையாடியபொழுது "உலகத்தில் எந்த இனத்துக்கும் இப்படி ஒருநிலைமை ஏற்படக்கூடாது" என்று கவலையுடன் தெரிவித்தார்.

(மா)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 3365

இலங்கைநாயகம் மகள் விமலாதேவி, மயிலிட்டி வடக்கு. வழக்காளி

மயிலிட்டி.

எதிராக

கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம், மயிலிட்டி. எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 3365-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1981-ம் வருஷம் ஆடி மாதம் 22-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 23435/- பின் 20-11-79 தொடக்கம் 2-5-80 வரைக்கும் ரூபா 15000/-க்கு 12% வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 783 சதம் 17 இதில் 30-4-80ல் ரூபா 9300/- கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை பெய்ப்புளியடி நில பரப்பு 20 ஆறுல் ஆட்சிப்படியும் அளந்த கண்டபடியும் நிலபரப்பு 24 செய்யரி வானமயிர்களும் தென்னை கிழக்குப் பக்கமாகவிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரம்பிள்ளை சுவாமிநாதனின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு சின்னப்பு கதிரேசுவும் மற்றும்பேருக்கும் உரிய காணிகளும் ஒழுங்கையும், மேற்கு றோட், தெற்கு சிதம்பரப்பிள்ளை சுவாமிநாதரின் உரிமைக்காரரின் ஆதனமும், கிணறும், இவ்வெல்லைப்படி இடங்களுக்குள் இக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் போடப்பட்டிருக்கும் தண்ணீர் இறைக்கும் வூல்சிவி இயந்திரமும் அதன் உதிரிப்பாகங்களும்

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

"விதானை வளவு",
சித்தன்கேணி,
21-05-81.

0193

## லேத் வேலையாள் தேவை

லேத் வேலையில் நன்கு அனுபவமுள்ளவர் உடனடியாக தேவை

அனுபவத்தையும் எதிர்பார்க்கும் வயதையும் குறிப்பிட்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்ல

## மெய்வல்லுநர் போட்டி 1981

இடம்: கல்லூரி மைதானம்

காலம்: 04-07-1981 சனிக்கிழமை

பிற்பகல் 2-30 மணி

பிரதம விருந்தினர்கள்:

திரு சு. நடராசா அவர்கள்
(தலைவர், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை)
திருமதி ச நடராசா அவர்கள்

விசேட விருந்தினர்;

திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்கள்
(வட்டாரக் கல்வியதிகாரி, காங்கேசன்துறை)

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

காங்கேசன்துறை,
01-07-1981

[0188]



உ

## மூன்றாண்டு நினைவு அஞ்சலி

மண்ணகம்: 19-10-58
விண்ணகம்: 3-7-79

இன்பருட்டி அல்வாய் வடக்கு
செல்வன்
சி. ஞானேஸ்வரன்

ஏறு நடையு மெழிலார் திருவுருவம்
இதயம் தெண்ணிய தெய்தலு மெவர்க்கும்
ஊறு நினையா வுளமு மூலகேந்தும்
உயர்நற் பண்பமை சாந்த நிகேதந்
கூறுநின் தாய் தந்தை சோதரர் கொண்ட ஆழ்
கூட்டிட வேபெமை விட்டகன் றணிசடை
ஆறு சேர்சிவன் அடிநிழல் சேர்ந்தவோர்
ஆண்டாமிதே நன்நினைந் நஞ்சலி
செய்குவேறும்

ஐயா, அம்மா, சோதரர்கள்
அழகேஸ்வரன், புகனேஸ்வரன், தங்கேஸ்வரன்,
இந்துமதி, மற்றும் பெரிய ஐயா, பெரியம்மா,
அண்ணன்மார், அக்காமார்.

(0194)

## ஒரு கொள்கை வீரர்!



[வடகோவை வரதராஜன்]

சுப்பிரமணியம் பரமேஸ்வரன் அமரத்துவம் எய்தி இன்றுடன் ஒருமாதம் பூர்த்தியாகிறது.

கோப்பாய் கிராமம் ஓர் வீர புருசனை இழந்து விரக்தி உறுகிறது. சமூகசேவை நிலையங்கள் ஓர் சாதனை வீரனை இழந்து துன்புறுகின்றன. ஆம் சமூக சேவையாளன் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் துப்பாக்கிக் குண்டினால் வீரசுவர்க்கம் எய்தி இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தி அடைகிறது.

வெள்ளை உள்ளமும் தன்னலமற்ற இதயமும் கொண்ட வீரர் பரமேஸ்வரன் தனது 28 வருட வாழ்க்கையில் ஏறத்தாழ 12 வருட வாழ்க்கையை சமூக சேவைக்கும் இலட்சியத்துக்குமே அர்ப்பணித்தார். இவர் சேவைபட்டு சிறப்புறாத மன்றங்களோ சேவை நிலையங்களோ கோப்பாயில் இல்லை என்றே கூறலாம்.

வடகோவை சபாபதி நாவலர் சனசமூக நிலையம், கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம், கோப்பாய் இளம் விவசாயிகள் கழகம், கோப்பாய் கலாமன்றம், கோப்பாய் விளையாட்டுக்கழகம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வடகோவை சித்திரவேலயுதர் நாடகநிலையம், ஆகிய சங்கங்களில் பொறுப்பான பதவிகள் வகித்து அவற்றை சிறப்புற நிர்வகித்த பெருமை அமரர் பரமேஸ்வரனையும் சாரும்.

சமூக சேவை அரசியல் இயக்கம் ஆகிய வற்றில் மட்டுமல்லாது அமரர் பரமேஸ்வரன் சமயப்பணிகளிலும், இலக்கியத்துறையிலும் பெரிதும் ஆர்வமுற்றிருந்தார்.

என்னுடன் சேர்ந்து தமிழ் அருவி என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடாத்தி வந்த அவர் தமிழ்மாதாயில் கருத்தாழமும் உணர்ச்சிப்பெருக்கும் பெருக்கும் உள்ள கதைகளை எழுதினார்.

எங்கெங்கு சிரமதானமோ அங்கெல்லாம் அவர் முன்னணித் தொண்டராக இருப்பார்.

அவர் டயிரிசெய்கை உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்ட பின்பு உருளைக்கிழங்கு விநியோகத்தில் நடந்த ஊழல்களை எல்லாம் ஒழித்தார். அவரின் சமரசத்தை மிஞ்சி பொலிஸ் நிலையம் சென்ற காணி வழக்குகள் இல்லையென்றே சொல்லலாம்.

இந்த சாதனை வீரனின் சாதனைகளைப் பொறுக்க மாட்டாது தானோ என்னவோ எருமை வாகனத்தை உதறிவிட்டு காலன் ஜீப்பில் ஏறி வந்தான் பாசக்கயிற்றை விட்டு விட்டு துப்பாக்கியை ஏந்தினான் கவர்தான் பரமேஸ் உயிரை புலம்பினர் சேவை மக்கள் ஒரு கொள்கைத் திருமகனை, சாதனை வீரனை அநியாயப்பலி கொடுத்தோம் அமரர் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் செய்த பணிகளை தொடர்ந்து செய்வதே அவர் ஆன்மாவை சாந்தி அடையச் செய்யும்.

மணிவாக்கு

அநீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதிசெய்வதுதான் இன்னும் அவமானகரமானது.

— பிளேட்டோ.

# நமது நோக்கு

## புதிய சகாப்தம்?

மாவட்ட அபிவிருத்திச் சபை ஆட்சிமுறை ஆரம்பமாகிறது.

இம்மாதத் தொடக்கத்திலே சுமார் 110 வருடங்களாக இயங்கிவந்த கிராம, பட்டின சபைகளின் நிர்வாகம் முடிவடைந்தது.

இதுவரை காலமும் இந்த இரு சபைகளின் நிர்வாகத்துக்குட்பட்டிருந்த பிரதேசங்கள், இனிமேல் அந்தந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் கீழ்க் கொண்டுவரப்படுகின்றன.

இந்தப் பாரிய மாற்றத்தையிட்டு அபிப்பிராய பேதம் வலுத்திருந்த போதும் ஆளுங்கட்சியும், தமிழர் கூட்டணியும் இதில் பெருநம்பிக்கை கொண்டிருக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் இப்புதிய முறைக்கு ஓர் அபசகுனமா? அல்லது ஒரு நல்ல பிரசவத்திற்குரிய வேதனையா? காலம்தான் காட்டும்!

நாம் ஏன் இவ்வாறு குறிப்பிடுகின்றோம்? புதிய ஆட்சிமுறையின் பலவற்ற இந்த நாடு சுதந்திரமடைந்தபின் கண்டுள்ளது; பல நாடுகளின் மிகத்திறமையான அம்சங்களை ஒன்றுசேர்த்து சுவையான பழரசத்தை ஆக்கும் திறமையில்; ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒன்றை ஒன்று வெல்ல முயற்சித்தது.

குறிப்பாக சட்டநிபுணர் டாக்டர் கொல்வின் ஆர். த சில்வா, சுதந்திரக் கட்சிக்கு 'இனியில்லையென்ற திறமான அரசியலமைப்பை ஏட்டில் இட்டார்; அதற்குப் பின்வந்த ஐ.தே. கட்சியின் தலைவர் இன்றைய ஜனாதிபதி பாராளுமன்ற ஆட்சிக்கு மேல் ஒருபடி உயரமாக நிறைவேற்றும் அதிகார ஜனாதிபதிமுறையைக் கொண்டுவந்தார். இவ்விரு ஆட்சிமுறைகளும் வாக்காளப்பெருமக்களால் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட புரட்சிகர மாற்றங்கள் அல்ல என்பது எமது பணிவான கருத்து.

இவற்றை நாம் குறிப்பிடும் காரணம் படித்த அனுபவம் நிறைந்த நிபுணர்கள் தயாரிக்கும் அரசியல் திட்டங்கள் ஏட்டுச் சுரைக்காயாக வருவது கண்கூடு என்பதைச் சுட்டிக் காட்டவே!

ஆட்சிப்பலம்பெற்ற அரசுதன் இஷ்டப்படி அரசியலமைப்பை மாற்றுவதும், திருத்தங்கள் கொண்டுவருவதும், தான் அதிகாரத்தில் எவ்விதத்திலும் குந்திவிடவேண்டுமென்பதும் அதனைப் பறிகொடுக்கப் படாதென்பதும் பெருநோக்கமாகவிருந்துவந்தது.

இன்று அமுலுக்கு வரும் புதிய அபிவிருத்திச் சபை ஆட்சிமுறை, பொதுவாக பொதுமக்கள் நேரடியாக ஆட்சியில் பங்குபற்றவும், சிறப்பாகத் தமிழ் பேசும் மக்கள்-சிறுபான்மை மக்கள் தங்கள் பிரதேசங்களைப் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி செய்யவும் உதவுமென்ற நம்பிக்கை கொண்டது.

அந்தப் பெருநம்பிக்கை ஏமாற்றத்தில் முடியாதிருக்க, மத்திய அரசும், மாவட்ட சபையும் ஒத்துழைக்கவேண்டும். பெருஞ் சந்தேகம் நிறைந்த இந்த நிபந்தனை நிறைவேறுமானால் இது ஒரு புதிய சகாப்தத்திற்கு வழிவகுக்கமுடியும்.

## யாழ்ப்பாண மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்விக்கு, தமிழ் மாணவர்கள் படும் பாடு கொஞ்சநெஞ்சமல்ல!

டாக்டராக வெளியேறுவதே தனிப் பாக்கியம் என்று பெற்றோர் தவமிடக்கின்றனர்! இதன் விளைவாகக் குத்துக்கரணம் போடும் மாணவர்களும், பெற்றோரும் எடுப்பது பகீரதப் பிரயத்தனம்.

இந்தப் பேராசையில் ஒரு பொல்லாப்புமில்லை. வெற்றி கிட்டாவிட்டால் விரக்தியடைந்து வாளாவிருக்கும் நிலை கவலைக்குரியது. மனநோயுற்ற மாணவர் பலர்.

இவற்றைத் தாண்டி, பல்கலை படித்துத் தலைமை பெற்று மாவட்ட அடிப்படையில் தோல்வி கண்ட தமிழ் மாணவர் கதி சொல்லவொணாது.

இந்த முட்டுக்கட்டையையும் தாண்டி, மருத்துவ பீடத்தில் அனுமதிபெறும் நூற்றுக்குக் குறைந்த 400 மாணவர்களில் தமிழ்மாணவர் பாடு. பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஒரு குழந்தை மருத்துவபீடம் — அதுவும் யாழ்ப்பாணத்திலேயே என்ற எண்ணமும் இதில் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணப் பெற்றோர்கள் பரம்பரை பரம்பரையாக வைத்தியக்கு சுருட்டு, றவி லைகிலைக், குத்தரிச் சோறு போன்ற மரபு சிறந்த பண்டங்களில் விசுவாசம்கொண்ட பிறவிகள்!

எனவே மருத்துவப் படிப்புக்கு கொழும்புபோல் வராதென்று நினைப்பவர்கள். அதிலும் பிழையொன்றுமில்லை. ஆனால் யாழ்ப்பாணச் சுருட்டு, யாழ்ப்பாண நல்லெண்ணெய், யாழ்ப்பாண மாம்பழம், யாழ்ப்பாண வெங்காயம் —ஏன் யாழ்ப்பாணக் கல்வி (தற்போது 'கம்பி') தென்னிலங்கையில் பெரும் கிராக்கி பெற்றிருந்தது. ஆங்கிலம் மூலம் கல்வி போதித்த காலத்தில் சிங்கள மாணவர் பலர் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்று! பெரும் பதவிகள்—எம். பிக்களாக, மந்திரிகளாக, அரசாங்கத்தின் பதில் தலைவராகக் கூடக் கடமை புரிந்திருக்கின்றனர்!

எனவே 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக டாக்டர்' என்றால் நாடெங்கும், உலகெங்கும் மதிக்கும் வகையில், இக்கறைப மாணவர்களுக்கும், இனி வரும் மாணவர்களுக்கும் வேண்டிய வசதிகள் அளிக்கப்படுவது அவசியம்.

இவ்விடயத்தையிட்டு யாழ். மருத்துவபீட மாணவர்கள் சில தினங்களுக்கு முன் நடத்திய அமைதிப் போராட்டம் சுமுகமாக முடிந்தது மகிழ்ச்சிக்குரியது.

யாழ் உபவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன்

# நயினைப்பதி நாயகியின் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் முப்பது மைல் தொலைவில் அலைகடலின் மத்தியில் சப்ததீவுக்கூட்டத்தினுள் நடுநாயகமாக விளங்கும் நயினைத் தீவின் வடபாலிலே, கடலை அடுத்த வேப்பமரச் சோலையிலே, வானுற ஓங்கி நிமிர்ந்து நிற்கும் அன்னை நாகபூஷணியின் அருள்மிகு ஆலய உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

அன்னையின் திருத்தலம் மிகவும் தொன்மைவாய்ந்தது. பண்டைப்பெருமை மிக்கது. செந்தமிழ்க்காவியமாகிய மணிமேகலையில் சிறப்பித்துக்கூறப்படும் மணிபல்லவம் இதுவே என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். ஆபுத்திரன் இட்ட அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தினை மணிமேகலை இங்கேயே பெற்ருள் என இதிபுவனேஸ்வரி பீடமாகத் திகழ்வது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். இங்கே மகாமேரு பர்வத ஸ்ரீ சக்கர யந்திரம் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பது மற்றுமோர் சிறப்பம்சமாகும். காசியிலே விசாலாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், திருக்கடவூரிலே அபிராமியாகவும் தலங்கள்தோறும் விசேட திருநாமங்களுடன் விளங்கும் அன்னை பராசக்தி நயினையிலே நாகபூஷணியாக விளங்குகின்ருள்.

அமைதியும் அழகும் நிறைந்த அற்புதமான, ஆனந்தமான சூழலிலே அன்னையின் ஆலயம் அமைந்துள்ளது. ஈழத்தின் எந்தவொரு சைவஆலயத்திற்கும் அமையாத சிறப்பு இது. சலசலத்துக் கரை மோதும் தெள்ளிய கடல்.

### விசுவலிங்கம் சபாநாதன்!

(பொருளாளர், நயினையம்பாள் தேவஸ்தானம்)

காசம் கூறும். அன்றியும் இலங்கையின் ஆதிக்குடியினரான நாகர் இங்கு வசித்தனர் எனவும், நாகவழிபாடு இங்கு சிறந்திருந்ததெனவும் கூறப்படுகின்றது. நாகவழிபாட்டின் தொடர்ச்சியாகவே நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குவதாகக் கருத இடமுண்டு. இவ்வாலயத்தின் மூலத்தானத்தில் அமைந்திருக்கும் ஐந்துதலைநாக அமைப்பினையுடைய கற்சிலை இதற்குச் சான்ருகும். இத்தகைய பழமையும் புதுமையும் மிக்கதே ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும்.

அன்னை பராசக்தி எங்கும் நிறைந்தவள். அருட்கடலான அவள் எழுந்தருளியிருக்கும் ஆலயங்களோ நாட்டில் அநேகம். அறுபத்துநான்கு சக்தி பீடங்களிலே அம்பிகை வீற்றிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவற்றிலே உயர்ந்து பரந்து தண்ணிழல் பரப்பும் வேப்பமரச் சோலை சிற்பம் நிறைந்த சிங்காரக் கோபுரம், தாய்மையான வெண்மணல்பரப்பு இத்தனையும் சேர்ந்து ஆலயத்தின் புறச்சூழலினை அழகுசெய்கின்றன. ஆலயத்தின் உள்ளே அமைதி, தூய்மை, தெய்வத் திருவருள் யாவும் கலந்த தெய்வீக உணர்வுதரும் ஓர் அற்புத நிலை. இதனை வர்ணிக்கவார்த்தையே இல்லை. அம்பிகையைத் தரிசிக்கும் அடியார்கள் இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

தலவிசேடம் மிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழாக்கள் 18ம் திகதி தெப்பத் திருவிழாவுடன் இனிது

[5-ம் பக்கம் பார்க்க]

# எந்தப் பத்திரிகைக்கும் கிடைக்காத அனுபவம்!

இலங்கை வரலாற்றில் முன் எப்போதும் நடவாத ஒரு சம்பவம் மிக மதிப்புக்குரிய ஈழநாட்டு பத்திரிகைக்கு நடைபெற்றுள்ளது.

வேறு பல சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன இவைதுயரம் அளிப்பவையாகும்.

'ஈழநாடு' பத்திரிகைக்கு கிடைத்த அனுபவம் உலக பத்திரிகையில் ஒன்றுக்கும் இதுவரை கிடைத்ததாக தெரியவில்லை. சுணக்கமில்லாமல்

## மக்கள் கருத்து

மீண்டும் இப் பத்திரிகை உன்னதமாக நடைபெறுவதற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறோம். இறைவனுடைய கருணை தமிழ் பேசும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்த பத்திரிகை இது பொறுப்புடையவர்களுக்கும். அவர்களை சேர்ந்தவர்களுக்கும் உதவியவர்களுக்கும், எங்களுடைய மனமார்ந்த நன்றி.

பத்திரிகையை ஸ்தாபித்த தமிழ் மக்கள் சமூகத்தில் பிரபலமாய் பரோபகார சிந்தனையுடன் தொண்டு செய்துவந்த மிக மதிப்பிற்குரிய குடும்பத்திற்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றி பத்திரிகை உரிமையாளர் முன்னோர் செய்த புண்ணியமும் எங்களுக்கு உதவி இருந்திருக்கிறதுபோல் தெரிகிறது. விசேஷமாக இலங்கையிலும், இந்தியாவிலும் பெரும் சமயத்தொண்டைசெய்து வந்த ஸ்ரீலஸ்ரீ இலக்கணசுவாமிகள் நினைவு மனத்தில் தோன்றுகிறது. இவர்களைப்பின்பற்றி இலங்கை தமிழ் மக்கள் ஒருவரும் செய்யாத தொண்டை பத்திரிகைப்பணியை அந்த பெரும் பரம்பரை குடும்பத்தைச் சேர்ந்த சகோதரரும் மற்றவர்களும் ஆரம்பித்து வைத்தார்கள் இதற்காக தமிழ் பேசும் மக்கள் மிக கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்ததற்கும் வேறு பல அரிய தொண்டுகளைச் செய்ததற்கும் இடைவிடாது தற்பொழுது செய்து வருகிறதற்கும் இறைவன் கிருபையோடு கூடிய உன்னதத்துடன் பத்திரிகையை நடத்தி வருமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம். ஈழநாடு பத்திரிகை புனர்வாழ்வை அடைந்திருக்கிறமாதிரி யாழ்ப்பாணமும், தமிழ் பேசும் மக்களும், இலங்கையில் இருக்கும் எல்லா மக்களும் நல்வாழ்வை சீக்கிரமாக அடையுமாறு வேண்டிக்

(5-ம் பக்கம் பார்க்க)

மருத்துவ பீடத்தை விருத்தி செய்ய எடுக்கும் முயற்சிகள் நாமறிந்தவை. கவுன்சிலும், மானியக் குழுவும், ஆதரவாளர்கள் அனைவரும் துரிதமாகக் கவனிக்கவேண்டிய விடயம் இது!

## நாடும் நடப்பும்

....."அவன் கமிஷன் எடுத்தாலும் மோசடியில்லை எப்படியோ ஆட்களை அனுப்பி வைக்கிருன்."

"எவடுதான் சொல்லுருன்கள் நான் வேருெருவனிட்டை ஏமாந்தபடியால் ஒன்றும் செய்யமுடியாமலிருக்கு."

வீதியில் ஒரே சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் மேற்கண்டவாறு தங்களுக்குள் பேசிக்கொண்டு சென்றுர்கள்.

வீதியிலும் சரி, வீட்டிலும் சரி, பஸ்ஸிலும் சரி, ரயிலிலும் எங்கே பார்த்தாலும் இளவட்டங்கள் சந்தித்துக் கொண்டால் இப்போதெல்லாம் வெளிநாடுகளுக்குப் போவதைப் பற்றித்தான் பேச்சு.

பாஸ்போர்ட் எடுப்பது பற்றியும், "பொண்ட் சைன்" பண்ணுவது பற்றியும், ஆலோசனை கேட்பதும், இதற்காக அங்குமிங்கும் அலைந்து திரிவதும் அவர்களின் வேலை!

இளைஞர்கள் மட்டுமல்ல, பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றியும், அதற்காக நகைகளை விற்பதற்கும், காணியை ஈடுவைப்பதற்கும் அலைவதைக் காணலாம்.

மேற்கு ஜேர்மனிக்குச் செல்வதற்காகக் கடந்த சில தினங்களாகக் கொழும்பில் போய்க் குவியும் இளைஞர்கள் தொகையைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது விமான டிக்கட் எடுத்துவிட்டு, பாஸ்போர்ட் எடுப்பதற்கு ஏஜன்சிகளிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கொழும்பு வீதிகளில் அலைந்து திரியும் இளைஞர்கள் பலர்!

திடீரென்று இவ்வளவு பெருந் தொகையில் மேற்கு ஜேர்மனிக்குச் செல்வதற்கு என்ன காரணம்? சில இளைஞர்களிடம் இது பற்றிக் கேட்டேன்.

மேற்கு ஜேர்மனியில் சர்வதேசக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறதாம். இதனால் அங்கு விசா பெருமலே போய்ச் சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறதாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுகமே சென்றுவிட்டால் வேலைவாய்ப்புப் பெற்றுவிட முடியுமாம்.

இது பற்றி மற்ருெரு இளைஞர் சொன்ன விளக்கம் இப்போது உலகக் கண்காட்சியைக் காரணமாகக்கொண்டு மேற்கு ஜேர்மனிக்குச் சென்ருல், அங்கு போனதும் மூன்று மாத விசா கொடுப்பார்கள். அங்கு உறவினர், நண்பர்கள் இருந்தால் உதவி கிடைக்கலாம் இந்த உதவியில்லாதவர்கள் தங்கள் செலவில் தங்கியிருந்து மூன்று மாதத்தின் பின் திருப்பி அனுப்பப்பட்டால் எவ்வளவு பணம் வீணுகிப்போகும்!

"வெளிநாடு வெளிநாடு என்று ஏன் இப்படித் தமிழ் இளைஞர்கள் அலைகிருர்கள்? உள்நாட்டிலேயே ஏதாவது தொழில் பார்த்துக்கொண்டு உழைக்கமுடியாதா?" என்று ஒரு சிங்கள நண்பர் தமிழ்த்தந்தையைப் பார்த்துக் கேட்டார். இதற்கு அந்தத் தந்தை அளித்த பதில் இது:

வெளிநாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு நாங்கள் மனப்பூர்வமாகச் சந்தோஷப்படவில்லை. பெருங் கஷ்டப்பட்டுத்தான் அனுப்புகிறோம். அவர்கள் அங்கு பணம் தேடி எங்களுக்கு அனுப்பவேண்டுமென்றுகூட நாங்கள் இப்

[2-ம் பக்கம் பார்க்க]

# "பிராந்திய பாராளுமன்ற ஒன்றியம் அமைக்கப்பட வேண்டும்"

## மாலைதீவு பிரதமர் யோசனை

மாலி, ஜூலை 2

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பிராந்திய பாராளுமன்ற ஒன்றியமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று மாலைதீவு பிரதமமந்திரி ஜனுப் அகமத் சபீர் யோசனை தெரிவித்துள்ளார்.

இலங்கை சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் மாலைதீவிற்கு விஜயம் செய்து அந்நாட்டின் பிரதமர் அகமத் சபீரைச் சந்தித்தபோதே அவர் இவ்யோசனையைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மாலைதீவிலிருந்து குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளது. (வெ)

# வியாபாரியிடம் கொள்ளை

(மன்னார்)

தலைமன்னாரிலைவைத்து வெளியூரைச் சேர்ந்த வியாபாரி ஒருவரிடம் 3,200 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

வெளியூரைச் சேர்ந்த வியாபாரி ஒருவர், கருவாடு கொள்முதல் செய்யத் தலைமன்னாருக்கு வந்து, தலைமன்னார் பழைய பாலத்தினூடு நடந்துசென்றபோது, சனநடமாட்டம் இல்லாத இடத்தில் ஒரு கோஷ்டியினரால் வழிமறிக்கப்பட்டதாகவும் அவரிடமிருந்து 3,200 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றதாகவும் தலைமன்னார்ப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தலைமன்னார்ப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் மூவரைக் கைதுசெய்து விசாரணையின் பின் விடுதலைசெய்தனர்.

# இஸ்ரேலுக்கு நவீன யுத்த விமானங்கள்

## அமெரிக்கா வழங்கும்

வாஷிங்டன், ஜூலை 2

இஸ்ரேலுக்கு ஆறு நவீன யுத்தவிமானங்களை அமெரிக்கா விநியோகிக்கவுள்ளது.

கடந்தமாதம் ஈராக்கின் அணு உற்பத்தி நிலையத்தை இஸ்ரேலிய விமானங்கள் தாக்கியதைத் தொடர்ந்து அந்நாட்டிற்கு யுத்தவிமானங்களை விநியோகிப்பதை அமெரிக்க ஜனாதிபதி றீகனின் நிர்வாகம் இடைநிறுத்தியிருந்தது.

இம்மாதம் 17ம் திகதிமுதல் இஸ்ரேலுக்கு மீண்டும் நவீன யுத்தவிமானங்களை வழங்குவதென்று றீகன் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இவ் நவீன யுத்தவிமானங்களுள் 'எப் 16' குண்டுவீச்சு விமானங்களும் அடங்குகின்றன.

'எப் 16' குண்டுவீச்சு விமானங்கள் அதி சக்திவாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அண்மையில் இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தனது கட்சி வெற்றிபெறுமென இஸ்ரேலிய பிரதமர் திரு பெகின் தெரிவித்துள்ளார். அடுத்த வார ஆரம்பத்தில் தனது கட்சி புதிய கூட்டரசாங்கமொன்றை அமைக்குமென்றும் அவர் தெரிவித்தார். (வெ)

# அம்புலன்ஸ் வண்டி கிடைத்தது

(மன்னார்)

முருங்கன் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை எடுத்துக்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து முருங்கன் அரசினர் வைத்தியசாலைக்கென தனியான அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் வண்டியை நிறுத்திவைப்பதற்கான கட்டிடம் ஒன்றினையும் முருங்கன் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நிறுவவுள்ளது.

# மதுவிலக்கிற்கு ஜனதாகட்சி எதிர்ப்பு

சென்னை, ஜூலை 2.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு தளர்த்தப்படுவதை எதிர்த்து ஜனதாகட்சி நேற்று துக்கம் அனுஷ்டித்தது.

தமிழ் நாட்டில் சாராய, கள்ளுக்கடைகள் திறக்கப்படுவதை ஆட்சேபித்து இக்கட்சி நேற்று சென்னை, மதுரை ஆகிய இடங்களில் ஊர்வலங்களை நடத்தியது. (செ)

# ஆழிக்குமரனின் புதிய சாதனை!

சென்னை, ஜூலை. 2

ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சலில் புதிய உலகசாதனை நிலைநாட்டியுள்ளார்.

இவர் சென்னையிலுள்ள அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ச்சியாக 72 மணித்தியாலம் ஒருநிமிடம் நீந்தி இப்புதிய உலகசாதனையை நிலைநாட்டினார்.

முன்னைய உலகசாதனை 65 மணித்தியாலங்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த உலக சாதனையை நிலைநாட்டிய ஆழிக்குமரன் ஆனந்தனை தமிழ்நாடு தொழிலமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி மாலை சூட்டி பாராட்டினார். (செ)

# கரை ஒதுங்கிய சிரக மூடைகள்

(மன்னார்)

மன்னார்ப்பகுதி கடலோரங்களில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான சிரக மூடைகளும் இன்னும் பல பொருட்களும் கரை ஒதுங்கின. இவற்றை மீனவர்கள் தமது வீடுகளுக்கு எடுக்கச் சென்றனர்.

# வளர்முக நாடுகளுக்கு உதவவும்


லண்டன், ஜூலை. 2

வளர்முக நாடுகளுக்கு உணவு, எரிபொருள், வர்த்தக உதவிகளை வழங்க செல்வந்த நாடுகள் முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் உலக பொருளாதார நாடுகளின் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"வளர்முக நாடுகள் எரிபொருள் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதால் அந்நாடுகளுக்கு செல்வந்த நாடுகள் உதவவேண்டும்" என்றார். (வெ)



(பருத்தித்துறை)

பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் தலைவராக வியாபாரிமூலையைச் சேர்ந்த திரு. செல்லையா சிவராஜசிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. சிவராஜசிங்கம் சிறந்த சமூக சேவையாளரும் பிரபல வர்த்தகருமாவார்.

★ மண்மேடுகள் அகற்றப்படாவிட்டால்

# தலைமன்னார்-ராமேஸ்வரம்

## கப்பல்சேவை பாதிக்கப்படலாம்?

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தில் உள்ள மண்மேடுகளை அகற்றி கப்பல் சேவை சிறந்தமுறையில் நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு தலைமன்னார்-ராமேஸ்வரம் ராமானுஜம் கப்பல் கம்பனி இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

துறைமுகப்பகுதியில் உள்ள மண்மேடுகளால் கப்பல் சேவை சரிவரநடைபெறுவதையும், அண்மையில் தலைமன்னாரிலிருந்து ராமேஸ்வரம் புறப்பட்ட ராமானுஜம் பிரயாணிகள் கப்பல், மண்மேடொன்றில் தரைதட்டி நின்றதையும், நீரோட்டம் பெருகி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபின்னர் மூன்று மணி நேர தாமதத்தின் பின்னர் ராமானுஜம் பிரயாணிகள் கப்பல் புறப்பட்டுச் சென்றதும் வாசகர்கள் அறிந்ததே.

15 வருடங்களுக்கு முன்னர் 'மயூரா' என்னும் கம்பனியால் தலைமன்னார் துறைமுகத்தில் மணல் அகழ்ந்து எடுக்கப்பட்டு மண்மேடுகள் அகற்றப்பட்டன. கடந்த 15 வருடங்களுக்குள் ஏற்பட்ட கடல் பெருக்கு, சூறாவளி காரணமாக இப்பகுதியில் மீண்டும் மண்மேடுகள் ஏற்பட்டுள்ளன. இதன் எதிரொலியாக தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல்சேவை பாதிப்படைந்துள்ளது. இதன் காரணமாக கடந்த சில வாரங்களாக தலைமன்னாரிலிருந்து ராமேஸ்வரம் புறப்பட்ட பிரயாணிகள் கப்பல், காலம் தாழ்த்தியே புறப்படுகிறது.

தலைமன்னார் துறைமுகத்தில் உள்ள மண்மேடுகள் அகற்றப்படாது விட்டால் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவை தடைப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

# பதவி உயர்வுடன் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் குறிஞ்சாத்தீவு உப்பளத்தில், உற்பத்தி முகாமையாளராகவும் வடபிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளராகவும் கடந்த நான்கு வருடங்கள் கடமையாற்றிய திரு. செல்லையா வேலாயுதபிள்ளை பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று அம்பாந்தோட்டைக்கு (தென் பிராந்தியம்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உப்புக் கூட்டுத்தாபனத்தில் சிறந்த சேவையும், ஊழியர்களின் நலன்கருதி பல சமூகப் பணிகளும் ஆற்றிய இவர், அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

யாழ்.மாவட்டத்தில்

# சீமெந்து விலையேற்றத்தை உடன்குறைக்க வேண்டும்"

## யாழ். மாநகரசபை தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

அரசாங்கம் உடனடியாக சீமெந்தின் விலையேற்றத்தைக் குறைக்கும் நிலையை நிறுத்தி மீன்பிடித் தொழிலாளரை வறுமையிலும் கஷ்டத்திலுமிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற தீர்மானம் யாழ். மாநகரசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடந்த மாதாந்த பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்தை திரு யோ. அ. செல்வநாயகம் கொண்டுவந்தார்.

எரிபொருள் விலையேற்றத்தாலும், உப்புவிலையேற்றத்தாலும் அல்லலுறும் கடல் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை செய்வதா அல்லது இத்தொழிலை கைவிடுவதா என வறுமையால் சிந்தித்து வரும் மக்களுக்கு அடுத்து ஒரு அபாயத்தை அரசாங்கம் செயற்படுத்துவதை அறிந்து வேதனைப்படுவதாகவும் வெளிநாட்டிலிருந்து தரம் குறைந்த கருவாட்டை இறக்குமதிசெய்து குறைந்த விலையில் விற்பனைசெய்வதால் வடபகுதி கருவாட்டை விற்கமுடியாமலிருப்பதாகவும், அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தின் பிரதிகளை மீன்பிடி அமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் யாழ்ப்பாண எம். பிக்கும் அனுப்பவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

திரு தம்பு கந்தையா கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேறியது.

சீமெந்து கூட்டுத்தாபனத்தால் யாழ். மாவட்டத்தில் விடுகட்டும் பாவனையாளர்களுக்கு நேரடியாக விநியோகிக்கும் சீமெந்தின் விலை 73 ரூபாவாக விற்கப்படுகின்றது. இது மிகவும் அநியாயமான விலைநிர்ணயமாகும். கூட்டுத்தாபன விலை 64 ரூபாவாக இருக்கும்போது வாகனக் கூலி என்ற போர்வையில் இக்கூடுதலான தொகை அறவிடப்படுகின்றது. மேலும் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனமும் இதே மாதிரி கூடுதலான விலைக்கு விற்பது கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கு நியாய விலையில் பொருட்களை விற்பது என்ற அடிப்படைக்கு மாறாக உள்ளது ஆகவே இவ்வநியாய

(5-ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

ஆனி மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை

(3-7-81)

மேடம்- சுபயோக தினம். சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள், ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும், படித்தவர்களின் தொடர்பில் பயனடைவீர்கள், எல்லாம் இன்பமயம்.

இடபம்- கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கலாம், கடமையில் ஆர்வம் பிறக்கும், டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும்.

மிதுனம்- பணமுடக்கம்வட்டமிடும், தொழில் துறையில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும், கடிதமொன்று கவலை வைத்தரலாம், மனத்திடம் வேண்டும்.

கடகம்- இல்லத்தில் இனிமை தவழும், வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும், ஆலயங்களில் உதவியுடன் செல்வாக்கு உயரும்.

சிங்கம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும், தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம், நிதானம் நன்று

கன்னி- பாக்கிய விருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும், தக்கசமயத்தில் உதவுவதற்கு தந்தை முன்வருவார், சிறப்பானதினம்.

துலாம்- வியாபாரத்துறையில் விருத்திக்கு இடமுண்டு செய்தொழில் சிறப்படையும் வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

விருச்சிகம்- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும், சுற்றுலாவின் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும், அதிக வருவாய்க்கு இடமுண்டு.

தனு- எண்ணத்தில் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கும், அற்பவிடயத்திற்குக் கூட பொல்லாங்கு கேட்க நேரிடும், தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள். சீறிவரும் கோபத்தை அடக்கவும்

மகரம்- குழறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக்கொள்ளவும், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும், பிரயாணத்தைத் தவிர்த்தல் நன்று.

கும்பம்- பிரச்சினைகள் பல இன்று நல்ல முடிவைத்தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமை தரும்.

மீனம்- ஆசாரக்குறைவான சம்பவங்கள் இடம் பெறும், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும், குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையலாம், கொடுக்கல் வாங்கல்களை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

சோதிடகலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

**வெஸ்லி** (சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
**அரசிளங்குமரி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எங்க பாட்டன் சொத்து

**வெலிங்டன்** (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

**லிடோ** யாழ். நகர்
10-30 2-30, 6-00, 9-30
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**வின்சர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**ஆதி பராசக்தி**
(கலர்—புதிய பிரதி)
6-7-81 **"The Last Hart Men"**

6-வது ஜனத்திரள் வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
**தர்மராஜா** (கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ [illegible] ★ சுந்தரராஜன் ★ [illegible]
**[illegible] பைரவன்**
([illegible])

**[illegible]** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30 (யாழ்ப்பாணம்)
சிவாஜி - மாலினி பொன்சேகா - ஸ்ரீதேவி நடித்த
**பைலட் பிரேம்நாத்**
10-7-81 முதல்
ஒரு கை ஓசை

**ராணி** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**எங்கள் தங்கம்**


# 2 பிரயாணிகளே இருந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு ஏற்பட்ட அனுபவம் என்ற தலைப்புடன் 28-6-1981 வெளியான செய்தி குறித்து யாழ். பஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். சவரிமுத்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

"25-6-81-ல் பி. ப. இரண்டு மணிக்குச் செல்லவிருந்த திருகோணமலை பஸ் வண்டி ரத்துச் செய்யப்பட்டதால் 20 பிரயாணிகள் பாதிக்கப்பட்டதாகவும் அவர்கள் பிரதியேக வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தி திருகோணமலை சென்றதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. ஆனால் பஸ் சேவை ரத்துச் செய்யப்பட்ட நேரத்தில் இரண்டே இரண்டு பிரயாணிகள்மாத்திரம் நிற்கக் காணப்பட்டார்கள்."

## எந்த...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்வது எங்கள் கடமை கோபத்தையும் பயத்தையும் தவிர்த்துக்கொள்வது உத்தமம் நாளார்க்கும் குடியல்லோம் என்ற சிறந்த வாக்கை மறவாமல் இருக்க வேண்டும். அப்படியே கோபமானது பாவம் என்ற வாக்கு எங்கள் மனதில் வைத்துக்கொள்வது நன்று. எங்கள் நடத்தையால் மற்றவர்கள் நடத்தையையும் திருத்திவைக்குமாறு இறைவனைத் தாள்மையுடன் அடிபேண வேண்டிக் கொள்கிறேன்.

சு. சிவசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற சட்டத்தரணி)
கொழும்பு.

## சீமெந்து...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விலையேற்றத்தை உடன் குறைத்து யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் விற்கும் நியாய விலைக்கே சீமெந்தை பொதுமக்களுக்கு விற்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி இச்சபை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரையும், கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாகவுள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரையும் கேட்டுக்கொண்டது. (ஈ)

# விசாரணை செய்யுமாறுகோரி கையெழுத்து 'வேட்டை'

(யாழ்ப்பாணம்)

யாழ். வன்செயல்கள் பற்றி விசாரணை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபையை ஜனாதிபதி கேட்கவேண்டும்' என்று கோரும் தீர்மானத்துக்கு ஆதரவு தேடும் முகமாக, நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், கையெழுத்து வேட்டை ஒன்றில் இறங்கியுள்ளது.

முதலில் இம் மகஜரில் 20க்கு மேற்பட்ட, பல்வேறு மதத் தலைவர்களும் தொடர்ந்து, அரசியல் கட்சித்தலைவர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோரும் கையொப்பமிடுவார்கள்.

இக் கையொப்பமிடும் திட்டம் பின் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கு தொண்டர் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. (மா)

## நயினைப்பதி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவெய்தும்.

மனக்கவலை மாற்றும் மாமருந்தாய் விளங்கும் அன்னை நாகபூஷணி. வேண்டுவார் வேண்டும் வரங்களையெல்லாம் வழங்குபவள். நம்பித்தொழும் அடியவர்க்கு நல்லன எல்லாவற்றையும் நல்குபவள் நாகபூஷணி என்ற நம்பிக்கையுடன், அலைகடல்கடந்து அனைப்பரும் இன்னல்களைத் தாங்கி அடியவர்கள் ஆயிரக்கணக்கில் வருகின்றனர். தீராத நோய்களெல்லாம் தீர்த்து வைக்கும் திருவருட் சக்தி அவள் என ஓடோடி வருகின்றனர். வாராத செல்வமெல்லாம் வருவிப்பாள் அன்னை பராசக்தி என அவள் அடிபணிய வருகின்றனர். இவ்வாறெல்லாம் நம்பிவரும் அடியவர்க்கு நல்லருள் புரிவதற்கென்றே அன்னை நாகபூஷணி அலைகடல்நோக்கி அமர்ந்திருக்கின்றாள். அன்னையின் கடைக்கண்பார்வை அடியவர்க்கு "நல்லன எல்லாம் தரும்" என அபிராமிப்பட்டர் பாடுகின்றார். "விழிக்கே அருளுண்டு" எனக்கூறி அன்னையின் திருவிழிகளின் அருட் பிரவாகத்தினைத் தெளிவுபடுத்துகின்றது அபிராமி அந்தாதி.

இவ்வாண்டு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் ஆலயத்தின் உற்சவத்தில் குறிப்பிடும்படியான விசேடம் ஒன்றுண்டு புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்சம் இம்மாதம் 11ம் திகதி வெள்ளோட்டம் விடப்படவுள்ளது: மறுநாள் 10ம் திருவிழாவன்று புதிய மஞ்சத்தில் அம்பிகை ஆரோகணித்து, விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் வீதியுலாவரும் அற்புதக் காட்சி இடம்பெறவுள்ளது, அம்பிகையின் மெய்யடியார்கள் பலரின் ஆதரவினாலும், மஞ்சத்திருப்பணிச்சபையினது அயராத உழைப்பினாலும் பெரும் பொருட்செலவுடன் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய திருமஞ்சம் அமைக்கப்பட்டுள்ளது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த்திருவிழா மிகவும் விசேடமானது. சிறந்த சிற்ப அமைப்புடன்கூடிய மூன்று தேர்கள் இங்கு இழுக்கப்படுகின்றன, இலங்கையில் வேறு எந்த ஆலயத்திலும் காணப்படாதளவு சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்தது அம்பாளின் பெரிய தேர், மூன்று தேர்களிலும் விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் ஆகிய மூவரும் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சி மிக அற்புதமானது.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்று மாணிக்கவாசகர் அம்பிகையைப்பற்றிக் கூறுகிறார். அவள் அடிபரவி இம்மை மறுமைப் பயன் இரண்டும் பெற்று இன்புறுவோமாக.

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போது எதிர்பார்க்கவில்லை. எமது நாட்டிலிருப்பதைவிட நமது இளைஞர்கள் வெளிநாட்டிலிருப்பது பாதுகாப்பு என்றே நினைக்கிறேம். அவர்கள் அங்கே சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பதை அறிந்து, நாமும் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கமுடியும்!

இதைக் கேட்ட அந்தச் சிங்கள நண்பர் "உண்மைதான்" என்று கூறியபடியே சிந்தனையில் ஆழ்ந்தார்.

-ஊர்சுற்றி

## மணிவாசகர்விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சொக்கநாதர் சிவாலயத்தில் மணிவாசகர் விழா இம்மாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. உபன்னியாசமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


**RAJAH** Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30



Bruce Lee Fighting his way to fame with his New Martial Arts

Golden Harvest's Presentation of the year

It tells the struggle of an overseas Chinese Leader

BRUCE LEE
MARIAYI

Thailand's leading Actress
MALARIN

**THE BIG BOSS**
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்

தினசரி 4 காட்சிகள்
**ஹரன்** (யாழ்ப்பாணம்)
✯ வேலியை தாண்டியதால் ஏற்பட்ட விளைவு ?
✯ அற்ப ஆசையால் நடந்தது என்ன ?
இவைகளைக் காணவேண்டுமா ?
★ சரத்பாபு ★ சுஜாதா
சென்ற ஆண்டு சிறந்த நடிகை
★ சரிதா ★
நடித்த
சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர்
K. பாலச்சந்தரின்
**நூல்வேலி**
(கலர்)

# உணர்வுகள் எரிவதில்லை! [1]

'பேனு' எழுதுவது



"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம், உண்மையை எழுதுங்கள்- உண்மையாய் எழுதுங்கள்,"

1959 'ஈழநாடு' முதல் பிரதியைப் பார்த்ததும் யோக சுவாமிகள் இவ்வாறு கூறி ஆசிர்வதித்தார்களாம்.

கடந்த 23 வருட காலத்தில் எம்மை ஏசியவர்கள் உண்டு, திட்டியவர்களுமுண்டு, ஏன் பத்திரிகையை எரிக்கவும் செய்தார்கள், ஆனால் ஈழநாடு கட்டிடத்தையே தீயிட்டுக் கொளுத்துவார்கள் என்று யாருமே எண்ணியதில்லை.

இப்படியும் நடக்கும் என்பதைத்தான் சுவாமிகள் அப்பொழுதே சூசகமாகக் குறிப்பிட்டிருப்பாரோ என்று இப்பொழுது எண்ணத் தோன்றுகின்றது.

ஃ ஃ

ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை காலையில் வழமைபோல் வேலைக்குப் புறப்பட ஆயத்தமாகின்றேன்.

'பஸ்' ஓடவில்லையென்று யாரோ கூறினுர்கள். வேலை நிறுத்தமாகவிருக்கலாம் என்று

"அவரை நேரத்தோடு அனுப்பி விடுங்கள் பஸ் வசதியில்லை. நான் வர முடியாது. நாளை காலையில் வருகிறேன் உண்மையில் என்னதான் நடந்தது?"

நான் கேட்கிறேன்:

'தமிழர்விடுதலைக் கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பல சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது. நாளைக்கு விபரமாகப் போடவிருக்கிருேம்',

செய்தி ஆசிரியர் மகாதேவா மிகவும் உற்சாகத்தோடுதான் பேசினுர். ஆனுல் அடுத்தநாள் அவரைநான் சந்தித்தபொழுது முதல்நாள் அவரிடமிருந்த உற்சாகத்தைக் காணவில்லை- மகிழ்ச்சியைக் காணவில்லை. வாழ்க்கையின் பெரும்பகுதியையும் ஓர் இரவுக்குள் இழந்து விட்ட ஒரு மனிதரைத் தான் கண்டேன்.

இரவோடு இரவாக இப்படியெல்லாம் நடந்து முடியும் என்று அவர் நினைத்தும்கூடப் பார்த்திருக்கமாட்டார்.

## துரும்பைக்கூட வீசவில்லை

1961 சத்தியாக்கிரகத்தின் போது அவசரகாலம் பிறப்பிக்கப்பட்டு ராணுவம் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுப்பு நடத்துவதுபோல் அட்டகாசத்தில் இறங்கிய வேளையிலும்கூட 'ஈழநாடு' காரியாலயத்தின்மீது அவர்கள் ஒரு துரும்பைத்தானும் வீசியதில்லை.

சத்தியாக்கிரகச் செய்திகளை உடனுக்குடன்- காலையில் ஒன்று- பகலில் ஒன்று- எனபல பதிப்புகளாக வெளியிட்டு 'ஈழநாடு' பணிபுரிந்ததை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளை விபரமாகப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு 'ஈழநாடு' தான் யாழ்ப்பாணத்தில் காரணமாய் இருந்தது என்பது அதிகாரிகளுக்குத் தெரியாமலில்லை. இருந்தும் பத்திரிகையின்மீது கைவைக்க எவரும் முன்வரவில்லை.

# 'ஹலோ 'ஈழநாடு' என்ன நடக்கிறது?'

நினைத்துக் கொண்டு வீதிக்கு வருகிறேன்.

'யாழ்ப்பாணத்தில் குழப்பம், அதனுல் தான்பஸ் ஓடவில்லை' யென்று பேசிக்கொள்கிருர்கள். வெகுநேரம் காத்திருந்தும் பஸ்கள் ஒன்றையும் காணவில்லை. டெலிபோனிலாவது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று உபதபால் நிலையத்திலிருந்து முயற்சி செய்தேன். யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தாருடன் தொடர்பு கொள்வதும் கூட சிரமமாகவிருந்தது. காலை சுமார் 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை முயற்சி செய்ததில் கடைசியாக ஒருவாறு தொடர்பு கிடைத்தது. செய்தி ஆசிரியர் பேசினுர்.

"அங்கு எப்படி இருக்கிறீர்கள் - என்ன நடக்கிறது" இது நான்.

"எங்களுக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. நீங்கள் வரத் தேவையில்லை. நாங்கள் சமாளிப்போம்" அவர் கூறினுர்.

"யார் யார் இருக்கிறீர்கள்"

"ஆசிரியர் பகுதியில் சபாரத்தினம் மாணிக்கம்...... மற்றும்...."

"மாணிக்கம் எப்படி வந்தார்"

"சைக்கிளில்"

## எறிகுண்டு வீச்சு

அதன் பிறகும் பலசம்பவங்கள் இடம்பெற்றன. ஆலயப் பிரவேசப் போராட்டம் உச்சக்கட்டத்திலிருந்த வேளையில் யாரோ சிலர் வெளியிலிருந்து இரவு நேரத்தில் எறிகுண்டுகளை 'ஈழநாடு' காரியாலயத்தின் மீது விட்டெறிந்துவிட்டு ஓடிவிட்டார்கள். அது யாராய் இருக்கும் என்பது பற்றி இன்னமும் சரியான தகவல் இல்லை.

ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தவர்களா அல்லது எதிர்த்தவர்களா இதைச் செய்தார்கள்? சமூகப் பரச்னையான ஆலயப் பிரவேசப் பிரச்னையை தம் சொந்த வளர்ச்சிக்குப் பயன்படுத்த முயன்றவர்களுக்கு போதிய பிரசாரம் கிடைக்கவில்லை என்பதாலா இந்தக் குண்டுவீச்சு?

சகலருக்கும் பொதுவான சமூக நீதி நிலவவேண்டும் என்பதிலேயே நாம் கருத்தாய் இருந்தோம். அந்த அடிப்படையிலேயே செய்திகளை வெளியிட்டோம். ஆனுல் குண்டு எறிந்து தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள் சிலர்.

## தமிழாராய்ச்சி மாநாடு

1974ல் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது யாழ். நகர் அல்லோலகல்லோலப்பட்டது. பொலிசார் நடத்திய அட்டூழியங்களை அதிகாரிகளின் பலத்த கெடுபிடிகளுக்கிடையிலும் 'ஈழநாடு' சுடச்சுட யாழ். மக்களுக்கு அளித்து பாராட்டைப் பெற்றது. அந்த நேரத்திலும் கூட பொலிசாரோ - வேறு அதிகாரிகளோ ஈழநாட்டின் மீது வன்முறையைக் கையாள நினைக்கவில்லை.

1977ம் ஆண்டு கலவரம் நிகழ்ந்தபோதும் அவசரகாலமும் பத்திரிகைத்தணிக்கையும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. ஆனுல் 'ஈழநாடு' தன்னைத்தானே தணிக்கை செய்து கொண்டு செய்திகளை வழங்கியது டெலிபோனில் - தனிப்பட்ட முறையிலும் கூட பயமுறுத்தல்கள் வந்ததுண்டு. "பத்திரிகையை சீல் வைப்பேன்" என்று அதிகாரத்தொனியில் பெரிய அதிகாரி ஒருவரைப் போல் பேசிய அநாமதேயக் குரல்களையும் கூடநாம் கேட்டதுண்டு. ஆனுல் பத்திரிகாலயத்தின் மீது வன்செயலை அவிழ்த்து விட எவரும் துணியவில்லை. மாருக அமைதியை நிலைநாட்டவும் மக்களின் உணர்ச்சி வேகத்தைத் தணிக்கவும் ஈழநாட்டின் உதவியை அப்போது அரச அதிகாரிகள் நாடிநின்ருர்கள்.

சாதிக்கலவரம் யாழ். நகரில் தலைதூக்கிய வேளைகளில் சமரசத்தை ஏற்படுத்தவும் மோதல்களைத் தவிர்க்கவும் பொலிஸ் உயர் அதிகாரிகளே எமது உதவியை நாடிநின்ருர்கள். 'ஈழநாடு' ஆற்றிய பணிக்கு உயர் பொலிஸ் அதிகாரிகளே பாராட்டு தெரிவித்த சந்தர்ப்பங்களும் உண்டு.

(நாளை தொடரும்)

---

## நயினை

[1-ம் பக்கத்தொடர்ச்சி)
17, 18ம் திகளிகல் தீர்த்தோற்சவமும் தெப்பத்திருவிழாவும் நடைபெறும்.

முக்கிய உற்சவம் நடைபெறும் தினங்களில் விசேட பஸ் சேவைகளை மேற்கொள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை முடிவு செய்துள்ளது. விசேடவள்ளச்சேவை, சுகாதாரசேவை ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவத்தின் பின்னர், கோவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, கோபுரம், கல்யாணமண்டபம் முதலிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு தைமாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்கு, மாமல்லபுரத்து சிற்பிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக, திருப்பணிச் சபைத்தலைவர் சட்டத்தரணி திரு. க. கதிரவேலுப்பிள்ளை தெரிவித்துள்ளார். இவ்வேலைகளுக்கு பதினைந்து லட்சரூபா செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறை உற்சவ தினங்களில் வழமைபோல் அன்னதானம் வழங்கவும், அமுதசுரபி அன்னதானசபை ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றது. (இ)

## மன்னாரில் உண்ணாவிரதம்

]மன்னார்]
தமிழர் விடுதலைக்கூட்டணியினர் நடத்திவரும் உண்ணாவிரதம் மன்னாரில் இம் மாதம் 5ம் திகதி இடம்பெறும்.

மன்னாரில் திருக்கேதீஸ்வரம் மாந்தைச் சந்தியில் எம். பி. திரு.சூசைதாஸன் தலைமையில் இந்த உண்ணாவிரதம் நடைபெறும். த. வி. கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் உட்பட பல எம்.பிக்களும், மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

## ரூ.20 ஆயிரம் தங்கச்சங்கிலி வழிப்பறி

]யாழ்ப்பாணம்]
தனிமையில் சென்ற வயோதிப மாது ஒருவரைத் தாக்கி 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்த சம்பவம் சுன்ஞகம் பொலிஸ்பகுதியில் நடைபெற்றுள்ளது.

புன்னலைக்கட்டுவனிலுள்ள ஈவினையில்வசிக்கும், ஞானம்மா செல்லத்துரை [65 வயது] என்ற வயோதிப கைம்பெண் பக்கத்து வீட்டிலிருந்து தனது வீட்டுக்குப் போகும் வழியில் அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தடியால் தாக்கிவிட்டு அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டதாக சுன்ஞகம் பொலிஸ் நிலையத்துக்கு முறையிட்டதைத் தொடர்ந்து, சப்இன்ஸ்பெக்டர் திரு. சிவராசா, தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியினர்பலத்ததேடுதல் நடாத்தி 10 நாட்களின் பின்பு நேற்று முன்தினம் புன்னலைக்கட்டுவன் ஈவினையிலுள்ள சீனியன் சுந்தசாமி என்பவரைக் கைது செய்துள்ளனர். [மா-இ]

## யாழ்ப்பாணத்தில் ஓட்டோ ரிக்ஷோ சேவை

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணத்தில் ஓட்டோ ரிக்ஷோ சேவை ஆரம்பிக்கப் படவுள்ளது.

சுயமுயற்சி வேலைத் திட்டத்தின்கீழ் 20 ஓட்டோ ரிக்ஷோக்களைக் கடன்திட்ட அடிப்படையில் வழங்க கைத்தொழில் அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு 10-ம், பருத்தித்துறைக்கு 5-ம், சாவகச்சேரிக் கு5 ம்ஆக ரிக்ஷோக்கள் வழங்கப்படவுள்ளன. [மா-இ]

## அபிவிருத்தி

[1ம் பக்கத் தொடர்ச்சி]
கும், அளவு கடந்த அதிகாரங்களை அதிகாரிகளுக்கு வழங்கும் சட்டங்களை நீக்கவேண்டும்.

ஃ மே 31ம்தேதி முதல்யாழ்ப்பாண சம்பவங்களில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு, தகுந்த தண்டனை வழங்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பூரண நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். ]க-இ]

## வெள்ளோட்டம்

[பண்டத்தரிப்பு]
வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன்கோவிலுக்கென உருவாக்கப்பட்ட புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. தேர்த் திருவிழா எதிர்வரும் 7ம் திகதி செவ்வாக்கிழமையும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## பிரிவினை

[1ம் பக்கத் தொடர்ச்சி]
பரம் தெரிவித்தார்.

திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

அரசாங்கம் விரைவில் பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவர இருக்கிறதாம். அதைக்கண்டு நாம் பயப்படப் போவதில்லை. எமது இலட்சியத்தையோ, கொள்கைகளையோ, போராட்டத்தையோ நிறுத்தப்போவதுமில்லை. அதன்பின்தான் எமது போராட்டம் மிகவும் தீவிரமடையும். தடைச் சட்டங்களின் மூலம் விடுதலை வேட்கையை அழிக்க முடியாது.

நாம் கோருவது பிரிவினை அல்ல. இழந்த உரிமைகளையே கோருகிருேம். எமது பகுதியை எம்மிடம் திருப்பித்தரும்படி தான் கேட்கிருேம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு முடிவைத்தான் எதிர்பார்க்கிருேம். காலத்திற்குக் காலம் எமது இனம் அழிக்கப்படுவதற்கு நிரந்தரமான ஒரு முடிவைத்தான்தேடுகிருேம். இது தவருே? இது பிரிவினையா? உலகநாடுகள் இந்த அநியாயங்களை அறியாமல் இல்லை. அவர்கள் யார் பக்கம் என இன்று அரசாங்கமே உணர்ந்திருக்கிறது.


## மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

ஃ மத்தியகிழக்கு ஃ சிங்கப்பூர்
ஃ பாரிஸ் ஃ நைஜீரியா
ஃ லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்
**உலகின் எப்பாகத்துக்கும்**

ஃ எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

**விமான டிக்கட்டுகள்**

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ **நைஜீரியன் விசா**

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள பிரபல்யமான

MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன்

ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

**மக்கினென்ஸ் ட்ரவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்,**

8, பருத்தித்துறை வீதி, - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office SrLanka Regd No. QB 100286/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி 7707